

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், அராலி மேற்கு, கோட்டைக்காடு,
மூளாயை வசிப்பிடமாகக் கொண்ட
வட்டுநகர் இராசபல்லவ முதலியார் கோத்திரத்தின் வழிதோன்றிய

# அமரர் சின்னத்தம்பி பேரின்பநாயகம் (பேரின்பம்)

(ஓய்வு பெற்ற புகையிலை சங்க முகாமையாளர்)

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# இன்ப மலர்

## 24.06.2013



மலேசியாவைப் பிறப்பிடமாகவும், அராலி மேற்கு, கோட்டைக்காடு,

மூளாயை வசிப்பிடமாகக் கொண்ட

வட்டுநகர் இராசபல்லவ முதலியார் கோத்திரத்தின் வழிதோன்றிய

அமரர்

# சின்னத்தம்பி பேரின்பநாயகம் ( பேரின்பம்)

(ஓய்வு பெற்ற புகையிலை சங்க முகாமையாளர்)
அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# இன்ப மலர்

## 24.06.2013

உ

# சமர்ப்பணம்

எமது அன்புத் தெய்வத்தின்
திருப்பாதங்களுக்கு இந்நூல் சமர்ப்பணம்

அன்பான கணவனாய்! பாசமுள்ள தந்தையாய்!
நேசமுள்ள மாமாவாய்!
தேனினுமினிய அப்பப்பாவாய் அம்மப்பாவாய்
கருணை நிறைந்த சகோதரனாய்,
மைத்துனராய் வையகத்தில்
எங்கள் வாழ்வு வளர்ச்சியடைய
ஒளிவிளக்காய் தன்னையே உருக்கி
ஒளியூட்டிய எங்கள் அன்புக்
குடும்ப விளக்கின் இனிய நினைவுகளை
எம் இதயத்தில் சுமந்த வண்ணம்
இம்மலரை அவர் பாதங்களில் அர்ப்பணித்து
சமர்ப்பிக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

– குடும்பத்தினர் –

உ
சிவமயம்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப்படும்"



தாயின் மடியில்
19.07.1940

இறைவன் மடியில்
25.05.2013

அமரர்

# திரு. சின்னத்தம்பி பேரின்பநாயகம்

## திதி நிர்ணய வெண்பா

மாண்புறு பேரின்பநாயகம் புவி துறந்து
ஆண்டு விஜய வைகாசித் திங்கள் அபரபக்கம்
பூண்டிடு நல் பிரதமை திதியில்
விண்ணுலகடைந்தார்.



## விநாயகர் துதி

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து

# முருகன் துதி



அன்பருக்கு அன்பனே நீ வா வா

| | | | |
|---|---|---|---|
| அன்பருக்கு அன்பனே நீ | வா | வா | முருகா |
| ஆறுபடை வீடுடையாய் | வா | வா | முருகா |
| இன்பமய சோதியே நீ | வா | வா | முருகா |
| ஈசனுமை பாலகனே | வா | வா | முருகா |
| உலகநாதன் மருமகனே நீ | வா | வா | முருகா |
| ஊமைக்கருள் புரிந்தவனே | வா | வா | முருகா |
| எட்டுக்குடி வேலவா நீ | வா | வா | முருகா |
| ஏறுமயில் ஏறியே நீ | வா | வா | முருகா |
| ஐங்கரனுக் கிளையவனே நீ | வா | வா | முருகா |
| ஆறுமுக வேலவனே | வா | வா | முருகா |
| ஒய்யாரி வள்ளிலோலோ | வா | வா | முருகா |
| ஓங்கார தத்துவமே | வா | வா | முருகா |
| அகில லோக நாயகனே | வா | வா | முருகா |
| ஓடிவா நீ ஆடிவா நீ | வா | வா | முருகா |
| ஆடிவா நீ ஆடிவா நீ | வா | வா | முருகா |

உ

சிவமயம்



# தோத்திரப்பாக்கள்

திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

தோடுடைய செவியன் விடையேறி ஓர் தூவெண்மதி சூடிக்
காடுடைய சுடலைப் பொடி பூசியென்னுள்ளங் கவர்கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட் பணிந்தேத்த அருள்செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மான் இவனன்றே

*(சம்மந்தர்)*

கூற்றாயின் வாறு விலக்ககிலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக் கேயிர வும்பகலும்
பிரியாது வணங்குவ னெப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேனடி யேனதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே

*(அப்பர்)*

பித்தாப்பிறை சூடிபெரு மானேயருளாளா
எத்தான் மறவாதே நிலைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்
- நல்லூரட்டுறையுள்
அத்தா வுனக்காளாயினி யல்லே னெலெமே

*(சுந்தரர்)*

## திருவாசகம்

பால்நினைத் தூட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய
தேனினை சொரிந்து புறம் புறம் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்தருளுவ தினியே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியை
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கை
செற்றவர் புரங்கள் செற்ற எம் சிவனை
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக்கண்டு கண்டுள்ளம்
குளிர என்கண் குளிர்ந்தனவே.

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகும் கழறஉழறி
உமைமணவாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள
அளப்பெருங் கரணங்கள் நான்கும்
சிந்தையேயாகக் குணமொரு மூன்றும்
திருந்து சாத்து விகமே யாக
இந்துவாள் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையின் தனிப் பெருங்கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்துட் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமற் எனையாழ்சற் - குருவாகிப்
பிறவாகித் திறமான பெருவாழ்வைத் - தருவாயே
குறமாதைப் புணர்வோனே குனனேசற் - குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் - பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறையரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்.



# அமரர் திரு. சின்னத்தம்பி பேரின்பநாயகம் அவர்களின் வாழ்வுப் பாதையின் நினைவு ஊற்றுக்கள்

கடல் வளத்தால் சூழப்பெற்ற தீவகற்பமான இலங்கை என்னும் ஈழவள திருநாட்டிலே சைவமும் தமிழும் தழைத்தோங்கிய வட பிராந்தியத்தில் நீர் வளமும் நில வளமும் நிறைந்தும், கல்விமான்களும் பக்த கோடிகளும் கலை வளமும் செழித்து மிளிரும் யாழ்ப்பாணம் என்னும் மாவட்டத்தினிலே பல வளங்களும் பொருந்திய கைவினைஞர்களும் கூடிய பிரதேசமாக வலிகாமம் மேற்கு திகழ்கின்றது. இப் பெருமண்ணில் நொச்சியம் பதியான் என்னும் அருள் பாலிக்கும் விநாயகப் பெருமான் காட்சியளிக்கும் இடமாம் அராலி மேற்குப் பகுதியில் அமைந்த கோட்டைக்காடு என்னும் கிராமம் ஆகும். அக்கிராமத்தினிலே வட்டு நகர் ராசபல்லவ முதலியார் கோத்திரத்தில் வழித்தோன்றிய முத்துக்குமாரு சின்னத்தம்பி (துரையப்பா) ஆவார். இப்பெரியார் ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தில் கல்வி கற்று பின் வேலைவாய்புக்காக மலேசியாவிற்குச் சென்றிருந்தார். அங்கு வேலை பார்த்து வரும் வேளை இவரது தந்தையார் தனது மகனுக்குக்கேற்ற மனையாளாக தனது சகோதரி மகளான வள்ளியம்மையை 1933 ஆம் ஆண்டு திருமணம் செய்து வைத்தார். தனது திருமணத்திற்குப் பின் மனைவியாரையும் மலேசியாவிற்கு அழைத்துச் சென்று கிள்ளான் (Klang) என்னும் இடத்தில் தமது குடும்ப வாழ்வை இனிதே நடத்தினார்.

இல்லறம் என்னும் நல்லறமாக வாழ்வில் இனிதே கண்டு பிள்ளைகள் பல பெற்று மகிழ்வுடன் வாழ்ந்து வந்தனர். இவர்களின் வாழ்க்கையின் பயனாகப் பெற்ற பரமேஸ்வரி, நாகரத்தினம்மா, சண்முகம், பேரின்பநாயகம், ஓங்காரவடிவேல் என்னும் தம் பிள்ளைகளுடன் கிள்ளான் என்னும் இடத்தில் மகிழ்ச்சிகரமாக வாழ்ந்து வந்தார்கள்.

இவர்களது பிள்ளைகள் தம் ஆரம்பக் கல்வியை கிள்ளானிலுள்ள கொன்வென்ற் (Convent), AGS அங்கிலிக்கன் அரசாங்கப் பாடசாலையில் கல்வி கற்று வந்தனர். அமரர் பேரின்பநாயகத்தின் ஐந்தாவது வயதினிலே தகப்பனார் கடும் சுகயீனமுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இவரது உடல்நிலை சுகயீனமுற்று காணப்பட்டதனால் அந்நாட்டு வைத்திய அதிகாரிகளால் ஆறுமாதம் சொந்த நாடான இலங்கையில் ஓய்வு எடுத்து உடல் நிலையை சீர் செய்து பின் வேலைக்கு வரும்படி ஆறுமாத லீவு கொடுத்தனர். இதனால் தந்தையார் தனது மனைவி பிள்ளைகளுடன் சொந்த நாடான இலங்கைக்கு வந்தார்கள்.

அன்னார் தனது கல்வியை வட்டு இந்து கல்லூரியில் கல்வி கற்று சித்தியடைந்தார். பின்பு வட்டுக்கோட்டை புகையிலைச் சங்கத்தின் முகாமையாளராக கடமையாற்றத் தொடங்கினார்.

அவ்வேளை வதிரன்புலோ ஶ்ரீசித்தி விநாயகரும் ஶ்ரீ முத்துக்குமார சுவாமியும் இணைந்து திகழும் மூளாய் என்னும் பதியில் துய்யமானா முதலி வம்சம் வழித்தோன்றிய முருகேசபிள்ளை வேதநாயகி தம்பதிகளின் கனிஷ்ட புதல்வி விமலாதேவி (கிளி) அவர்களை 1977ம் ஆண்டு பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டதற்கமைய இல்வாழ்க்கையில் இணைந்து கொண்டார். பதுமையும் பணிவும், நற்பண்பும் உடைய அமைதியான குணமகளை மனைவியாக ஏற்று அவர்களது இல்லறத்தின் பயனாக அஸ்திக்கு ஒன்று என்ற ஒரு ஆண்மகன் அருளீசனையும் ஆசைக்கு ஒன்று பெண் மகள் என்று லோகதராணியையும் பெற்று சீரும் சிறப்புமாக இல்வாழ்க்கையை நடத்தினார். பிள்ளைகள் வளர்ந்து பள்ளி செல்லும் பருவம் வந்ததும் தமது வதிவிடத்திற்கருகில் அமைந்த கல்விக் களஞ்சியமாகிய மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியை படிக்க வைத்தார்கள்.

இவரது மகன் இடைநிலை கல்வியை காரைநகர் தியாகராஜா மகா வித்தியாலயத்திலும் அதன்பின் தொடர் கல்வியை யாழ்ப்பாணக் கல்லூரியிலும் படிக்க வைத்தார். மகள் லோகதாரணி இடைநிலைக் கல்வியை யாழ்ப்பாணக் கல்லூரியிலும் உயர்தரப் பிரிவை விக்ரோரியாக் கல்லூரியிலும் கற்றார். யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்பக் கல்லூரியில் உயர் தேசிய கணக்கியில் டிப்ளோமா கற்கை நெறியைப் படிக்க வைத்தார். மேலும் அமரர் பணியாற்றிய வட்டுக்கோட்டை புகையிலைச் சங்கம் நாட்டின் சீரற்ற காலநிலையால் மூடப்பட்டதைத் தொடர்ந்து தனியார் விவசாய மருந்துக் கடைகளிலும் பணியாற்றியதுடன் விவசாயம் கால்நடை வளர்ப்பு போன்ற துறைகளிலும் ஈடுபட்டு வந்தார்.

இந்நிலையில் உயர்தர பிரிவைப் பூர்த்தி செய்த மகன் அருளீசனுக்கு சுழிபுரத்தை சேர்ந்த இரத்தின வடிவேல் நகுலேஸ்வரி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வி துஷ்யந்தி (செல்வம்) அவர்களை இல்லற பந்தத்தில் இணைத்து வைத்தார். அவர்கள் தங்கள் விருப்பதிற்கு இணங்க லண்டன் மாநகருக்கு சென்று அங்கு வாழ்ந்து வருகிறார்கள். இவர்களது இல்லற பந்தத்தில் மலர்ந்த செல்வங்களான இரு பிள்ளைகள் அபிநயா, அஸ்வினி ஆவர். அமரர் தனது அன்புப் பேரக் குழந்தைகளுடன் அன்பாக தொலை பேசியில் கதைத்து அவர்களது அன்பு மழலைகள் கேட்டு பேரானந்தம் அடைந்து வந்தார். அபிநயாவும் அஸ்வினியும் செல்லமாக அப்பப்பா என்று அழைத்து அவருடன் அன்பு மழலை பேசி விளையாடி வந்தனர். அவர் தனது பேரக்குழந்தைகளின் தொலைபேசி அழைப்புக்காக காத்திருந்து அவர்களுடன் செல்லக் கதைகள் பல சொல்லி மகிழ்ந்து வந்தார்.

மகள் உயர் கல்வியை நிறைவு செய்திருந்த வேளை தன் மகளுக்கேற்ற மாங்கலியம் தேடும் பாணியில் மூளாயைப் பிறப்பிடமாகவும் கணேசபுரம் கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்டவர்களுமாகிய திரு. திருமதி. யோகேஸ்வரன் மகாலட்சுமி தம்பதிகளின் அன்பு புதல்வரான லண்டன் மாநகரில் பொறியியலாளராக கடமையாற்றுபவருமான தனரஞ்சனை தனது மகளான லோகதாரணிக்கு திருமாங்கலியம் செய்து இல்லற பந்தத்தில் இணைத்து மகிழ்ந்தார். இவர்களது இணைப்பினால் இரு மழலைச் செல்வங்களான ரிஸ்வினி, ராகவன் கிடைக்கப் பெற்றனர். அமரர் மழலைச் செல்வங்களுடன் செல்லமாக தொலைபேசியில் பல கதைகள் கேட்டு பெரும் உவகை அடைந்தார்.

பேரக்குழந்தைகளின் மழலை மொழிகேட்டு அன்பான கதை சொல்லி மகிழ்ந்திருந்த வேளை விதி சதி செய்யும் காலம் வந்த போது, அன்னாரது உடல் சுகயீன முற்று யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். சிகிச்சைகள் பயனளிக்காத நிலையில் காலனும் தனது கணக்கில் வரவு வைக்கும் திகதியாம் 25.05.2013 அன்று இரவுவேளை அன்னார் மண்ணுலகிலிருந்து விண்ணுலகிற்கு பயணமானார்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*



# சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்

தொல்லை யிரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே. எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவு' ரெங்கோன்
திருவா சகமென்னும் தேன்.

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏக னநேக னிறைவனடி வாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பருக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க
ஈசனடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சேவடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
சீர் ஆர் பெருந்துறை நம் தேவன் அடிபோற்றி
ஆராத இன்பம் அருளு மலைபோற்றி
சிவனவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன்அரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பனியான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணதற்கு எட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்நிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லாவினையேன் புகழுமா றொன்று அறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய் பாம்பாகிக்

கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்
செல்லாஅ நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானாம் நாம் விமலா
பொய்யாயின எல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானமில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதியில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாயெனைப்புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தி நேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தாய்யெம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தவன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே

தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமு மில்லானே யுள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமா மல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே யந்தம் நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான வுண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனேயோ வென்றேன்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி யறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்.

சிவபுராணம் முற்றிற்று.

உ

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிய

# கோளறு திருப்பதிகம்

திருச்சிற்றம்பலம்

பண் - பியந்தகாந்தாரம்

வேயுறுதோளிபங்கன் விடமுண்டகண்டன்
மிகநல்ல வீணைதடவி
மாசறுதிங்கள் கங்கை முடிமேலணிந்தெ
னுளமே புகுந்தவதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனி பாம்பிரண்டுமுடனே
ஆசறுநல்ல நல்ல அவை நல்லநல்ல
வடியாரவர்க்குமிகவே 1

என்பொடு கொம்போடாமை யிவைமார்பிலங்க
வெருதேறியேழை யுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடிவந்தெ
னுளமே புகுந்தவதனால்
லொன்பதொடொன்றொடேழு பதினெட்டொடாறு
முடனாயநாள் களவைதா
மன்பொடுநல்ல நல்லவவை நல்லநல்ல
வடியாரவர்க்குமிகவே 2

உருவளர் பவளமேனி யொளிநீறணிந்து
வுமையோடும் வெள்ளை விடைமேன்
முருகலர் கொன்றை திங்கண் முடிமேலணிந்தெ
னுளமே புகுந்தவதனால்
திருமகள் கலையதூர்தி சயமாதுபூமி
திசை தெய்வமானபலவு
மருநெறிநல்ல நல்லவவை நல்லநல்ல
வடியாரவர்க்குமிகவே 3

மதிநுதன்மங்கையோடு வடபாலிருந்து
மறையோது மெங்கள் பரம
னதியோடு கொண்றைமாலை முடிமேலணிந்தெ
னுளமே புகுந்தவதனால்
கொதியுறு காலனங்கி நமனோடுதூதர்
கொடுநோய்களான பலவு
மதிகுணநல்ல நல்லவவை நல்லநல்ல
வடியாரவர்க்குமிகவே 4

நஞ்சணி கண்டனெந்தை மடவாடனோடு
விடையேறு நங்கள் பரமன்
றுஞ்சிருள்வன்னிகொன்றை முடிமேலணிந்தெ
னுளமே புகுந்தவதனால்
வெஞ்சினவவுணரோடு முருமிடியுமின்னு
மிகையான பூதமவையு
மஞ்சிடுநல்ல நல்லவவை நல்லநல்ல
வடியாரவர்க்குமிகவே 5

வாள்வரியதளதாடை வரிகோவணத்தர்
மடவாளனோடு முடனாய்
நாண்மலர் வன்னிகொண்றை நதிசூடிவந்தெ
னுளமே புகுந்தவதனால்
கோளரியுழுவையோடு கொலையானை கேழல்
கொடுநாகமோடு கரடி
யாளரிநல்ல நல்லவவை நல்லநல்ல
வடியாரவர்க்குமிகவே 6

செப்பிளமுலைநன் மங்கை யொருபாகமாக
விடையேறு செல்வனடைவா
றொப்பிளமதியுமப்பு முடிமேலணிந்தெ
னுளமே புகுந்தவதனால்
வெப்பொடு குளிரும் வாதமிகையான பித்தும்
வினையானவந்துநலியா
வப்படிநல்ல நல்லவவை நல்லநல்ல
வடியாரவர்க்குமிகவே 7

வேள்பட விழிசெய்தன்று விடைமேலிருந்து
மடவாடனோடுமுடனாய்
வாண்மதி வன்னிறொன்றை மலர்சூடிவந்தெ
னுளமே புகுந்தவதனால்
வேழ்கடல் சூழிலங்கை யரையன்றனோடு
மிடரான வந்துநலியா
வாழ்கடல்நல்ல நல்லவவை நல்லநல்ல
வடியா ரவர்க்குமிகவே 8

பலபலவேடமாகும் பரனாரியாகன்
பசுவேறுமெங்கள் பரமன்
சலமகளோடெருக்கு முடிமேலணிந்தெ
னுளமே புகுந்தவதனால்
மலர்மிசையோனுமாலு மறையோடு தேவர்
வருகாலமானபலவு
மலைகடன்மேரு நல்லவவை நல்லநல்ல
வடியா ரவர்க்குமிகவே 9

கொத்தலர்குழலியோடு விசயற்குநல்கு
குணமாயவேட விகிர்தன்
மத்தமுமதியு நாகமுடிமேலணிந்தெ
னுளமே புகுந்தவதனால்
புத்தரொடமனை வாதிலழிவிக்குமண்ண
றிருநீறு செம்மைதிடமே
யத்தகுநல்ல நல்லவவை நல்லநல்ல
வடியா ரவர்க்குமிகவே 10

தேனமர்பொழில்கொளாலை விளைசெந்நெறுன்னி
வளர்செம்பொனெங்குநிகழ
நான்முகனாதியாய பிரமாபுரத்து
மறைஞானஞான முனிவன்
றானுறுகோளுநாளு மடியாரைவந்து
நலியாதவண்ணமுரைசெய்
யானசொன்மாலை யோதுமடியார்கள்வானி
லரசாள்வராணை நமதே 11

திருச்சிற்றம்பலம்

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய

# திருவெம்பாவை

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மி விம்மி மெய்மறந்து
போதா ரமளியின்மேனி நின்றும் புரண்டிங்கண்
ஏதேனும் ஆகாள் கிடந்தாளென் னேயென்னே
ஈதேயெந் தோழி பரிசேலோ ரெம்பாவாய். 1

பாசம் பரம்சோதிக் கென்பா யிராப்பகல்நா
பேசும்போ தெப்போதிப் போதா ரமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசீ யிவையுஞ் சிலவோ விளையாடி
ஏசு மிடமீதோ விண்ணோர்க ளேத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்து
ஈசனார்க் கன்பார்யா மாரேலோ ரெம்பாவாய். 2

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
னத்தனா னந்த னமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையி ரீசன் பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
வெத்தோநின் னன்புடைமை யெல்லோ மறியோமோ
சித்த மழகியார் பாடாரோ நஞ்சிவனை
யித்தனையும் வேண்டு மெமக்கேலோ ரெம்பாவாய். 3

ஒண்ணித் தலநகையா யின்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியா ரெல்லாரும் வந்தாரொ
வெண்ணிக்கொ டுள்ளவர் செல்லுகோ மவ்வளவுங்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ள
முண்ணெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயேவந்
தெண்ணிக் குறையிற் றுயிலேலோ ரெம்பாவாய. 4

மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
போலறிவோ மென்றுள்ள பொக்கங் களேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே யறிளவரியான்
கோலமும் நம்மையாட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்
றோல மிடினு முணரா யுணராய்கா
ணேலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய். 5

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே யெழுப்புவ னென்றலும் நாணாமே
போன திசைபகரா யின்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே யறிவரியான்
றானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
யூனே யுருகா யுனக்கே யுறுமெமக்கு
மேனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய். 6

அன்னே யிவையுஞ் சிலவோ பலவமர
ருன்னற் கரியா னொருவ னிருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தொன்னாவென் னாமுன்னந் தீசேர் மெழுகொப்பா
யென்னானை யென்னரைய னின்னமுதென் றெல்லோமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேறா யின்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியா
லென்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய். 7

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
மேழி லியம்ப வியம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழியீ தென்ன வுறக்கமோ வாய்திறவாய்
யாழியா னன்புடைமை யாமாறு மிவ்வாறோ
வூழி முதல்வனாய் நின்ற வொருவனை
யேழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய். 8

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேத்துமப் பெற்றியனே
யுன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார்தாள் பணிவோமாங் கவர்க்கேபாங்காவோம்
அன்னவரே யெங்கணவ ராவா ரவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே யெமக்கெங்கோ னல்குதியே
லென்ன குறையு மிலோமேலோ ரெம்பாவாய். 9

பாதாள மேழினங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதோர் புனைமுடியு மெல்லாப் பொருள்முடிவே
பேதை யொருபாற் றிருமேனி யொன்றல்லன்
வேதமுதல் விண்ணோரு மண்ணுந் துதித்தாலும்
மோத வுலவா வொருதோழன் றொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப்பிள்ளைகா
ளேதவனூ ரேதவன்பே ராருற்றா ராரயலார்
ரேதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய். 10

மெய்யார் தடம்பொய்கை புக்கு முகேரன்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்கா யாரழல்போற்
செய்யாவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ யாட்கொண் டருளும் விளையாட்டின்
னுய்வார்க ளுய்யும் வகையெல்லா முய்ந்தொழிந்தோம்
மெய்யாமற்காப்பா யெமையேலோ ரெம்பாவாய். 11

ஆர்த்த பிறவித் துயர்கெடநா மாத்தாடுந்
தீர்த்தனற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடுங்
கூத்தனிவ் வானுங் குவலயமு மெல்லாமுங்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைக
ளார்ப்பரவஞ் செய்ய அணிகுழன்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
மேத்தி யிருஞ்சுனைநீ ராடேரோ ரெம்பாவாய். 12

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
லங்கங் குருகினத்தாற் பின்னு மாரவத்தாற்
றங்கண் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
லெங்கள் பிராட்டியு மெங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப் பாய்ந்துநம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 13

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி யப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
யாதி திறம்பாடி யந்மா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோ ரெம்பாவாய். 14

ஓரொருகா லெம்பெருமா னென்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகா லோவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத்தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவ ராமாறும்
மாரொருவ ரிவ்வண்ண மாட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார் நாம்பாடி
யேருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 15

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
ளென்னத் திகழ்ந்தெம்மை யாளுடையாள் ளிட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
மென்னச் சிலைகுலவி நந்தம்மை யாளுடையா
டன்னிற் பிரிவிலா வெங்கோமா னன்பர்க்கு
முன்னி யவணமக்கு முன்சுரக்கும் இன்னருளே
யென்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய். 16

செங்க ணவன்பாற் றிசைமுகன்பாற் றேவர்கள்பா
லெங்கு மிலாததோ ரின்பநம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
யிங்குநம் மில்லங்க டோறு மெழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
யங்கண் ணரசை யடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 17

அண்ணா மலையா னடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போற்
கண்ணா ரிரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணா ரொளிமழுங்கித் தாரகைகள் டாமகலப்
பெண்ணாகி யாணா யலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந்தாடேலா ரெம்பாவாய். 18

உங்கையிற் பிள்ளை யுனக்கே யடைக்கலமென்
றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் மச்சத்தா
லெங்கள் பெருமா னுனக்கொன் றுரைப்போங்கே
ளெங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
வெங்கை யுனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெவங்கண் மற்றொன்றுங் காணற்க
விங்கிப் பரிசே யெமக்கெங்கோ னல்குதியேல்
லெங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய். 19

போற்றி யருளுகநின் னாதியாம் பாதமலர்
போற்றி யருளுகநின் னந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுளுயிர்க்கு மீறா மிணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியா முய்யவாட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய். 20

திருவெம்பாவை முற்றிற்று.

உ

# திருப்பொற்சுண்ணம்

முத்துநற்றாமம் பூமாலை தூக்கி
முளைக்குடம் தூபம் நற்றீபம் வைமின்
சக்தியும் சோமியும் பார்மகளு
நாமகளோடு பல்லாண் டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்பதியுங்
கங்கையும் வந்து கவரி கொள்மின்
அத்தன் ஐயாறன் அம்மானைப் பாடி
ஆடப் பொற்சுண்ண மிடித்து நாமே. I

பூவியல் வார்சடை யெம்பிரார்க்கு
பொற்றிருச் சுண்ண மிடிக்க வேண்டும்
மாவின் வடுகின்ன ரண்ண கண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறம்நிலாமே
குனிமின் றொழுமி னெங்கோ னெங்கூத்தன்
தேவியுந் தானும் வந்தெம்மை யாளச்
செம்பொன்செய் சுண்ண மிடித்து நாமே. 2

சுந்தர நீறணிந்தும் மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டி யெங்கு
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோனயன் றன்பெருமான்
ஆழியான் நாதன் நல்வேலன் தாதை
எந்தரம் ஆளுமையாள் கொழுநற்
கேய்ந்த பொற்சுண்ண மிடித்து நாமே. 3

காசணி மின்க ளுலக்கை யெல்லாம்
காம்பணி மின்கள் கறையுரலை
நேசமுடன் அடிய வர்கள்
நின்று நிலாவுக என்று வாழ்த்தி
தேசமெல் லாம்புகழந் தாடுங்கச்சித்
திருவேகம்பன் செம்பொற் கோவில் பாடி
பாச வினையைப் பறித்து நின்று
பாடிப்பொற் சுண்ண மிடித்து நாமே. 4

அறுகெடுப் பாரய வும்மரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர் கணங்க ளெல்லாம்
நம்மிற் பின்பல்ல தெடுக்க வொட்டோம்
சிறிவுடை மும்மதில் எய்த வில்லி
திருவே கம்பன் செம்பொற் கோயில்பாடி
பாச வினையைப் பறித்து நின்று
பாடிப்பொற் சுண்ண மிடித்து நாமே. 5

உலக்கை பலவோச்சு வார்பெரியர்
உலகமெ லாம் உரல்போ தாதென்றே
கலக்க அடியவர் வந்து நின்றார்
காண உலகங்கள் போதா தென்றே
நலக்க அடியோமை ஆண்டு கொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத் தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்து பொற் சுண்ண மிடித்து நாமே. 6

சூழுகந் தோளவளை ஆர்ப்ப வார்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்ப வார்ப்ப
நாடவர் நம்தம்மை ஆர்ப்ப வார்ப்ப
நாமுமவர் தம்மை ஆர்ப்ப வார்ப்ப

பாடக மெல்லடி யார்க்கும் மங்கை
பங்கின னெங்கள் பராபரனுக்
காடக மாமலை யன்ன கோவுக்
காடப் பொற் சுண்ண மிடித்து நாமே. 7

வாள்தடங் கண்மட மங்கை நல்லீர்
வரிகளை ஆர்ப்ப வண் கொங்கை பொங்க
தோள்திரு முண்டகந் துதைந் திலங்க
சோத்தெம் பிரானென்று சொல்லிச் சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங் காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மை யிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப் பாடி
ஆடப்பொற் சுண்ண மிடித்து நாமே. 8

வையக மெல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கை நாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறைய அட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப் பாடி
செம்பொன் உலக்கை வலக்கை பற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடப்பொற் சுண்ணம் இடித்து நாமே. 9

முத்தணி கொங்கை ஆட ஆட
மொய்கழல் வண்டினம் ஆட ஆட
சித்தம் சிவனொடும் ஆட ஆட
செங்கயற் கண்பனி ஆட ஆட
பித்தெம் பிரானொடும் ஆட ஆட
பிறவி பிறரொடும் ஆட ஆட
அத்தன் கருணை யோ டாட ஆட
ஆடப்பொற் சுண்ணம் மிடித்து நாமே. 10

மாடு நாகைவான் நிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவளந் துடிப்ப
பாடுமின் நம்தம்மை ஆண்ட வாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெரு மானைத் தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத் தேறி
ஆடுமின் அம்பலத் தாடி னானுக்
காடப் பொற் சுண்ண மிடித்து நாமே. 11

மையமர் கண்டனை வான நாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன் தன்னை
ஐயனை ஐயர் பிரானை நம்மை
அகப்படுத் தாட்கொண் டருமை காட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்
போதரிக் கண்ணினை பொற்கொடித் தோட்
பையர வல்குல் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ண மிடித்து நாமே. 12

மின்னிடைச் செந்துவர் வாய்க் கருங்கண்
வெண்நகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடைய யாரமு தெங்க ளப்பன்
எம்பெரு மானிம வான் மகட்கு
தன்னுடைக் கேள்வன் மகன் தகப்பன்
தமைய னெம்எம் மையன் தாள்கள் பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கை நல்லீர்
பொற்றிருச் சுண்ண மிடித்து நாமே. 13

சங்க மரற்றச் சிலம் பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலை யாடச்
செங்கனி வாயித ழுந்துடிப்பச்
சேயிழையீர் சிவலோகம் பாடி

கங்கை இரைப்ப அராவிரைக்கும்
கற்றைச் சடைமுடி யான் கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
பொற்றிருச் சுண்ண மிடித்து நாமே. 14

ஞானக் கரும்பின் தெளிவைப் பாகை
நாடற் கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானை
சித்தம் புகுந்து தித்திக்க வல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டு கொண்ட
கூத்தனை நாத்தழும் பேற வாழ்த்தி
பானற் தடங்கண் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ண மிடித்து நாமே. 15

ஆவகை நாம்வந் தன்பர் தம்மோ
டாட்செய்யும் வண்ணங்கள் பாடி விண்மேல்
தேவர்க னாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ் செல்வச்
சேவகம் ஏந்திய வெல் கொடியான்
சிவபெருமான் புரம் செற்ற கொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப் பாடிச்
செம்பொன் செய்சுண்ண மிடித்து நாமே. 16

தேனக மாமராக் கொன்றை பாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப்பிள்ளை பாடி
மால்விடை பாடி வலக்கை யேந்து
மூனக மான்மழுச் சூலம் பாடி
உம்பரும் இம்பரும் உய்ய அன்று
போனக மாக நஞ்சுண்டல் பாடி
பொற்றிருச் சுண்ண மிடித்து நாமே. 17

அயன்தலை கொண்டு செண் டாடல்பாடி
அருக்கன் எயிறு பறித்தல் பாடிக்
கயன்தனைக் கொன்றுரி போர்த்தல் பாடி
காலனைக் காலால் உதைத்தல் பாடி
இயைந்தன முப்புரம் எய்தல் பாடி
ஏழை அடியோமை ஆண்டு கொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடி யாடி
நாதற்குச் சுண்ண மிடித்து நாமே. 18

வட்ட மலர்க் கொன்றை மாலை பாடி
மத்தமும் பாடி மதியும் பாடிச்
சிட்டர்கள் வாழுந் தென்தில்லை பாடி
சிற்றம்பலத் தெங்கள் செல்வம் பாடி
கட்டிய மாகணக் கச்சை பாடி
கங்கணம் பாடிக் கலித்த கைம்மேல்
இட்டுநின் றாடு மாரவம் பாடி
ஈசற்குச் சுண்ண மிடித்து நாமே. 19

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்மையும் பொய்மையும் ஆயினார்க்கு
சோதியு மாயிரு ளாயி னார்க்கு
துன்பமு மாயின்ப மாயி னார்க்கு
பாதியு மாய முற்று மாயினார்க்கு
பந்தமு மாய் வீடுமாயி னார்க்குக்
ஆதியு டனந்தமு மாயி னாருக்
காடப் பொற் சுண்ண மிடித்து நாமே. 20

உ

சி. ஜெயானந்தசர்மா
பிள்ளையார் கோவில்
மூளாய்
சுழிபுரம்.

S. JEYANANTHASARMA
PILLAIAR KOVIL
MOOLAI
CHULIPURAM.

## "ஆசியுரை"

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்ற திருவள்ளுவரின் வாக்கிற்கு அமைய மலேசியாவில் பிறந்து கோட்டைக்காடு மற்றும் மூளாய் என்னும் புகழ்மிக்க கிராமத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து, உயர்ந்த மனிதனாகவும் ஒழுக்க சீலராகவும் திகழ்ந்த அமரர் சின்னத்தம்பி பேரின்பநாயகம் இன்று எம்மைவிட்டு இறைபதம் அடைந்து விட்டார்.

"நீரில் எழும் நீர்க்குமிழி நிலைகொல் போல
நில்லாது உயிர்நீக்கி விடும் நிச்சயம் அன்றோ"

என்ற பாம்பாட்டிச்சித்தாரின் பாடலானது நீர்க்குமிழியானது எந்த நேரத்திலும் உடைந்து விடும் அதுபோல் மனிதனின் உடம்பு எந்த நேரத்திலும் அழியக்கூடியது. இது நிலையாமை தத்துவம் "பிறப்பு உண்டேல் இறப்பு நிச்சயம்" என்பதற்கு யாரும் விதிவிலக்கன்று. நம் உடலில் உயிர் இருக்கும் போதே அறத்தின்படி வாழ வேண்டும். அறவாழ்வு வாழ்ந்த பெரியவர் இன்று எம்மிடையே இல்லை என்று எண்ணும் போது கவலையாக உள்ளது. "வாழ்வாங்கு வாழ்ந்தவர்கள் வானுலகில் தெய்வத்துள் வைக்கப்படுவார்கள்" என்ற நம்பிக்கையுடன் அவர் தம் ஆத்மாசாந்தியடைய வதிரன்புலோக சித்தி விநாயகனின் பாதார விந்தங்களை வேண்டி நிறைவு செய்கின்றேன்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

பிரம்மஸ்ரீ சி. ஜெயானந்தசர்மா
"பிரதம அர்ச்சகர்"
மூளாய், வதிரன்புலோ
சித்தி விநாயகர் தேவஸ்தானம்.

## Beloved Apappa

We miss you very much
We cannot stop thinking about you
Asvini is very lucky to see you,
Speak with you, and play with you
I am unlucky,
Both of us are happy to meet
you over the phone several times and
Shared talking, singing and laughing
All the love and funs we
Shared with you are
the sweetest memories
Hopefully you are watching us from heaven
We are praying to God that you will rest in peace
You will always be remembered
in our heats and minds as a sweetest Apappa
"May your Soul rest in peace"

*Your Loving,*
*Grand Children,*
*Apinaya, Asvini*

## Our Dearest Amappa

We miss you very much
We cannot stop thinking about you
you always call us "Ponkunchus" Now we
cannot hear the word in our live again
You will always be in our thoughts and mind
Our prayers for you to rest in peace.

*Your Loving,*
*Grand Children,*
*Risvini, Ragavan*

# இரங்கல் உரை

தாத்தா,

நீங்கள் இல்லாத வீடு

வெறுமை குடிகொண்ட காடாய்

நீங்கள் மட்டும் சுமந்த குடும்பம்

மீகாமன் இல்லாத கப்பலாய்

எங்கள் காரியங்களில்

மூத்தோனாய் வழிகாட்டிய

உங்கள் வழிகாட்டல்கள்

நிரவாத இடைவெளியாய்

எம்மீது நீர் காட்டிய பரிவு

உம்மை நாம் தேடும் ஏக்கமாய்

நீர் கூறிய வார்த்தைகள்

செவியில் ரீங்காராமாய்

இன்று உம்மைத்தேடி

ஏங்கித் தவிக்கின்றோம்.


இங்ஙனம்,

விதுஷன், கஜலக்ஷன், ஷயந்தவி

# இருகரம் கூப்பி இதயபூர்வமாக
# நன்றி நவில்கின்றோம்

தன்பணியை தலையாய பணியாக சிரமேற்கொண்டு சேவைகள் பல செய்து வாழ்வாங்கு வாழ்ந்து இறைவன் காலடி எய்திய எங்கள் அன்புத் தெய்வம் அமரர் திருவாளர் சின்னத்தம்பி பேரின்பநாயகம் அவர்கள் பிரிந்த செய்தி கேட்டு ஓடிவந்து உதவியவர்களுக்கும் இறுதிக்கிரியைகளின் போது கலந்து கொண்டோரிற்கும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலுமிருந்து தொலைபேசி மூலம் ஈமெயில் மூலமும் அனுதாபங்களை தெரிவித்தவர்களுக்கும் நோய் வாய்ப்பட்டிருந்த பொழுது மிக அன்பாகச் சிகிச்சையளித்த யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தார்கள் அனைவருக்கும் இறுதி வரை எம்முடன் இருந்து பல பல உதவிகள் புரிந்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலியை வெளியிட்ட இந்து இளைஞர் மன்றத்தினருக்கும், மிகக் குறுகிய கால இடைவேளையில் இந்த "இன்பமலரை" மிகச் சிறந்த முறையில் அச்சிட்டுக் கொடுத்த றூபன் பிறிண்டேர்ஸ் அச்சகத்தாருக்கும், அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், இன்று நடைபெறும் வீட்டுக் கிருத்திய கிரியைகளில் கலந்து அவர் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அனைவருக்கும் மற்றும் பல வழிகளில் உதவியோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*



24.06.2013

இங்ஙனம்
குடும்பத்தினர்.


## The Gist Gita

Whatever happened to you,
it went on well.
Whatever is happening now
is going well
Whatever has to happen
will also be good
What have you lost
for you to cry?
What have you brought with you
for you to lose?
What have you created
for it to go waste?
Whatever you obtained
was taken from here.
Anthing you gave away
was given to you here.
What is yours today,
will belong to someone tomorrow.
In another day
it may belong to someone else.






# வம்சாவ



கதிர்காமமுதலி
* நெல்லிநாதர்
* ஆறுமுகம்
* வேலுப்பிள்ளை
* சின்னத்தங்கச்சி
+
* சுந்தரம்
* பார்வதிப்பிள்ளை
+
* சங்கரப்பிள்ளை
* புவனேஸ்வரி
* தங்கம்மா
+
* ஞானசேகரம்
நெல்லிநாயகி
செல்வநாயகி
பாலச்சந்திரன்
* தேவநாயகி
தவநாயகி
கமலநாயகி
பூரணச்சந்திரன்
* கந்தையா
* இலட்சுமிப்பிள்ளை
+
* தம்பையா
யோகராணி
மகேஸ்வரன்
கந்தப்ப முத
* ஆறுமுகம்
* கந்தப்பிள்ள
* கனகசபை
* சுப்பிரமணிய
+
* நாகம்மா
சிவபாக்கி
பரமேஸ்வரி
+
சோதிலிங்கம்
ருத்திரகுமரன்
சுதாகரன்
* இராஜேஸ்வரி
* - அமரர்கள்

# ாவழி



கந்தப்ப முதலி
ஆறுமுகம்
கந்தப்பிள்ளை
மாப்பான முதலி
* கனகசபை
* வள்ளிப்பிள்ளை
* பூதப்பிள்ளை
+
* தையல்நாயகி
* சுப்பிரமணியம்
+
* நாகம்மா
* சிவகாமிப்பிள்ளை
+
* சிற்றம்பலம்
* முதலித்தம்பி
+
* பகவதி
* சின்னத்துரை
சிவபாக்கியம்
* மகேஸ்வரி
+
* அற்புதநாதன்
பாமலோஜினி
பாலகிருஷ்ணன்
* விமலதாசன்
குகன்
+
கலைவாணி
சுயாணன்
ாஜேஸ்வரி
கமலேஸ்வரி
+
யோகநாதன்
சிவனேஸ்வி
+
பரமசிவம்
ஆரணன்
நர்மதன்
கஜனன்


கீதாசாரம்
எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்,
எதற்காக நீ அழுகின்றாய்?
எதை நீ கொண்டுவந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்?
அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகின்றது.
மற்றொருநாள் அது
வேறொருவருடையதாகின்றது.
இந்த மாற்றம் உலக நியதியாகும்.
பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்
Ruban
ரூபன் பிறிண்டேர்ஸ் ஆனைக்கோட்டை.
021 225 5566